[1978 செப்டம்பர் 7

"நீர் அளவு கருவி"கள் திருடு.

* வினு 76—திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக் களுக்கு விடையளிப்பாரா ?

(அ) கோவை மாவட்டம், குரிச்சி என்ற ஊரில் மத்திய அரசின் நில நீர் ஆய்வு வாரியத்திற்குச் சொந்தமான 4 "Water level Recorders" திருடு போய்விட்டதாகச் சொல்லப் படுவது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதைக் கண்டுபிடிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) நான்கு "வாட்டர் லெவல் ரிக்காடர்கள்" 23-9-77 முதல் காணுமற் போனது உண்மை.

(ஆ) இவைகள் கண்டு பிடிக்கப்பட்டுவிட்டன.

தோட்டக்கலைத் துறை.

* வினு 77— திரு. துரை முருகன் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) விவசாயத் துறையில் இருந்து தோட்டக்கலையை (Horticulture) தனியாகப் பிரித்து ஒரு இலாக்காவாக ஆக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) கர்நாடக மாநிலத்தில் உள்ளதுபோல் இம்மாநிலத்திலும் தோட்டக்கலை வளர்ச்சிக்கென தனியாக ஒரு துறையை ஏற்படுத்த லாம் என்ற கருத்து ஆராயப்பட்டது.

2. இதனை வேளாண்மை இயக்குநருடன் அரசு கலந்து ஆலோசித்தது. 1979-80 ல் நிறைவேற்ற விரிவான திட்டத் தைச் சமர்ப்பிக்குமாறு வேளாண்மை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டார். திட்டம் அரசுக்குக் கிடைத்தவுடன் தோட்டக் கலைக்கென தனியாக ஒரு துறை அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

[முற்பகல் 9.40]

திரு. மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவரவர்களே, விவசாயத் துறையிலிருந்து தோட்டக் கலையைத் தனியாகப் பிரித்து செயல்படுத்தப் போவதாக அமைச்சரவர்கள் கூறினுர் கள். கர்நாடகத்தைச் சேர்ந்த பெங்களூருக்கு அருகில் தர்மபுரி